1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவர் கொடுத்திருக்கிறார். பார்த்துக் கொள்ளுகிறேன். ஏற்கனவே நான் தீர்ப்பை ஒத்தி வைத்திருக்கிற பிரச்சினையோடு சேர்ந்ததுதான் அது. அடுத்து அறிவிப்பு....

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: நான்கு நாட்களுக்கு முன் சொன்னேன், ''நோட்டீஸ் நேரடியாக வரவில்லை'' என்று. அதைப் பற்றி ஒன்றும் சொல்லக் காணோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அது சம்பந்தமான தஸ்தாவேஜிகளைக் கொடுத்திருக்கிறார். ஏற்கெனவே ஒத்தி வைத்திருக்கிற தீர்ப்போடு சேர்ந்து தான். இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் தீர்ப்பைச் சொல்லிவிடுகிறேன்.

Thiru G. Vasantha Pai: I want to mention that Thiru Wahab has quoted from the affidavit which I have filed in Court wrong statements. I want to read the portions relevant to the matter from my affidavit, only the relevant portions of the affidavit which I have filed in Court, since he has made a wrong quotation.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதைப் படிக்கத் தேவையில்லை. அதை எனக்கு அனுப்பினால் போதும்.

4. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட முன்வடிவுகளின் பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றிருக்கிறேன்:—

(1) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, வேளாண்மை விளைபொருள் விற்பனை (திருத்தம், தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1978).

(2) 1978ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1978).

(3) 1978ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1978).